**தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர், தொடக்கக் கல்வி இயக்குநர் மற்றும் தனியார் பள்ளிகள் இயக்குநர்களின் இணை செயல்முறைகள், சென்னை – 06.**

**ந.க.எண்.** 048688 **/எம்1/இ1**/2026, **நாள்.** 09.04.2026

**பொருள் :** 2025–26ஆம் கல்வியாண்டு பள்ளிகளுக்கு கோடை விடுமுறை அறிவித்தல் மற்றும் 2026–27ஆம் கல்வியாண்டு பள்ளிகள் தொடங்குதல் – தொடர்பாக.

அரசு / அரசு உதவி பெறும் / தனியார் தொடக்க / நடுநிலை / உயர்நிலை மற்றும் **மேல்நிலைப் பள்ளிகளில் 1 முதல் 9ஆம் வகுப்புவரை பயிலும் மாணவர்களுக்கான பள்ளி இறுதித் தேர்வுகள் 16.04.2026 அன்று நிறைவடைகின்றன. 17.04.2026 முதல் பள்ளி மாணவர்களுக்கு மட்டும் கோடை விடுமுறை என அறிவிக்கப்படுகிறது.**

ஏப்ரல் 25ஆம் தேதிவரை அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் தொடக்க/ நடுநிலை/ உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் எல்.கே.ஜி/யூ.கே.ஜி வகுப்புகளை கையாளும் ஆசிரியர்கள் உட்பட அனைத்து ஆசிரியர்களும் பள்ளிக்கு வருகை புரிந்து, விடைத்தாள் மதிப்பீட்டு பணி வரும் கல்வி ஆண்டிற்கான மாணவர் சேர்க்கை பணி சார்ந்த நிர்வாகப் பணிகள் மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலரால் வழங்கப்பட்ட தேர்தல் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் மற்றும் மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு (இடைநிலைக் கல்வி / தொடக்கக் கல்வி) அறிவுறுத்தப்படுகிறது.

2026–27ஆம் ஆண்டிற்கான புதிய கல்வியாண்டில் 01.06.2026 திங்கட்கிழமை முதல் அனைத்து வகை அரசு / அரசு உதவிபெறும் / தனியார் தொடக்க / நடுநிலை / உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் வகுப்புகள் தொடங்கப்படும் என அறிவிக்கப்படுகிறது.

வரும் கல்வியாண்டு முதல் 1–3ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு புதிய பாட நூல்கள் அறிமுகப்படுத்தப்படுவதால் இவ்வகுப்புகளை கையாளும் ஆசிரியர்களுக்கு 01.06.2026 முதல் 03.06.2026 வரை மாவட்ட அளவில் பணியிடைப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளது. எனவே, 1–3ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு மட்டும் 04.06.2026 (வியாழன் கிழமை) அன்று முதல் வகுப்புகள் தொடங்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

**(த.பி.பா.)**

மேற்கண்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள அனைத்து வகை தலைமை ஆசிரியர்களுக்கும் அறிவுரைகள் வழங்குமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள், மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலைக் கல்வி / தொடக்கக் கல்வி / தனியார் பள்ளிகள்) அறிவுறுத்தப்படுகிறார்கள்.

9/4/26

**இயக்குநர்**
**தனியார் பள்ளிகள் இயக்ககம்**

**இயக்குநர்**
**தொடக்கக் கல்வி இயக்ககம்**

03/04/2026

**இயக்குநர்**
**பள்ளிக் கல்வி இயக்ககம்**

**பெறுநர்**

1. அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்
   (இடைநிலைக் கல்வி / தொடக்கக் கல்வி / தனியார் பள்ளிகள்)
3. அனைத்து வகை பள்ளித் தலைமை ஆசிரியர்கள் (உரிய வழியாக)

**நகல்**

1. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், பள்ளிக் கல்வித் துறை, சென்னை–09
   அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து தெரிவிக்கப்படுகிறது.
2. மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், சென்னை–06
   தகவலுக்காக கனிவுடன் தெரிவிக்கப்படுகிறது
3. ஆணையர், சமூக நலன் மற்றும் பெண்கள் மேம்பாட்டுத் துறை,
   காமராஜர் சாலை, சென்னை–05
   (தகவலுக்காக கனிவுடன் தெரிவிக்கப்படுகிறது)
4. ஆணையர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, சேப்பாக்கம், சென்னை–05
   (தகவலுக்காக கனிவுடன் தெரிவிக்கப்படுகிறது)
5. ஆணையர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சேப்பாக்கம், சென்னை–05
   (தகவலுக்காக கனிவுடன் தெரிவிக்கப்படுகிறது)
6. மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், சென்னை–06 (தகவலுக்காக கனிவுடன் தெரிவிக்கப்படுகிறது)
7. மாநிலத் திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, சென்னை – 06
   அவர்களுக்கு (தகவலுக்காக கனிவுடன் தெரிவிக்கப்படுகிறது)
8. இயக்குநர், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை – 06
   (தகவலுக்காக கனிவுடன் தெரிவிக்கப்படுகிறது)
9. இயக்குநர் , அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–06
   (தகவலுக்காக கனிவுடன் தெரிவிக்கப்படுகிறது)